**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**

முன்னிலை திரு ஆர்.சதீஸ்குமார், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2018ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19ஆம் நாள் வெள்ளிக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.79/2016</u>

1. அன்பு
2. தங்கராஜ்
3. வெங்கடேஷ் ...வாதிகள்

..எதிராக..

1. ரவிச்சந்திரன்
2. சின்னபையன் (எ) சின்னசாமி
3. சார்பதிவாளர், போச்சம்பள்ளி
4. ஆர். சத்தியசீலன். ...பிரதிவாதிகள்

( இ.ம.எண்: 97/2017 நாள் 27.3.2017-ன் படி தாவா பிராது திருத்தப்பாடு செய்யப்பட்டது)

WEB COPY

இவ்வழக்கு 18.10.2016ம் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் ஜி.கேசவன், அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.ஜெயபாலன் அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 2, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் யாரும் ஆஜரில்லாததாலும், அதுசமயம் பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும் இந்நீதிமன்றத்தின் முன்பு 11.01.2018ம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

வழக்கிடை அ ___ அட்டவணை சொத்துக்கள் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை அ ___ அட்டவணை சொத்துக்களில் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், வழக்கிடை ஆ ___ அட்டவணை சொத்துக்கள் 2 ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை ஆ ___ அட்டவணை சொத்துக்களில் 2ம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ம் பிரதிவாதியும், அவரின் ஆட்களும் எவ்வித

இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், வழக்கிடை இ —— அட்டவணை சொத்துக்கள் 3 ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை இ —— அட்டவணை சொத்துக்களில் 3 ஆம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு 1 ஆம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை சொத்து பெயரில் 1 ஆம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்ள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக்கோரியும், வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரத்தையும், 4ம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரத்தையும் ரத்து செய்ய 3ம் பிரதிவாதிக்கு உத்தரவிட்டு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுகளை வாதிகளுக்கு 1,2, 4 பிரதிவாதிகள் செலுத்தகோரியும் பிரதிவாதிகளுக்கு எதிராக, உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 26, விதி 1 முதல் 6 கட்டளை 7ன் கீழ் வாதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு.

WEB COPY

2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:

வழக்கிடை சொத்துக்கள் வாதிகளின் தகப்பனார் வழி பாட்டனரான சுருட்டைகான் (எ) சின்னசாமி என்பவருக்கு பிதுரார்ஜிதமாய் பாத்தியப்பட்டு அவருடன் வாதிகளின் தகப்பனார் 2ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவித்து வந்தார். வழக்கிடை சொத்துக்களுக்கான வருவாய்த்துறை ஆவணங்கள் 2ம் பிரதிவாதி மற்றம் வாதிகளின் பாட்டானார் பெயர்களில் கூட்டாக உள்ளது. 1ம் பிரதிவாதி வழக்கிடை சொத்தக்களுக்கு மூன்றாம் நபர். 4ம் பிரதிவாதி வழக்கிடை சொத்தை 1ம் பிரதிவாதியிடம் மோசடியாக கிரயப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளார். வாதிகளுக்கு கடந்த 07.07.2003ம் தேதியில் போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.722/2003ன் படி 1ம் வாதிக்கு வழக்கிடை சொத்த அ- அட்டவணை சொத்துக்களையும், ஆவண எண்.723/2003ன் படி 2ம் வாதிக்கு ஆ-அட்டவணை சொத்துக்களையம், ஆவண எண்.724/2003ன் படி 3ம் வாதிக்கு வழக்கிடை சொத்து இ-அட்டவணை சொத்துக்களையும் தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சுவாதீனம் அளித்தார்கள். வாதிகளுக்கு வழங்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணங்களில் கண்ட சொத்துக்களுக்கு வருவாய்த்துறையின் மூலம் பட்டா எண்.162ல் கூட்டு பட்டா பெற்று அனுபவித்து வருகிறார்கள். வழக்கு சொத்துக்களுக்கான வருவாய்த்துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை

வாதிகளின் பெயரில் இருந்து வருகிறது. வழக்கிடை சொத்துக்களில் வாதிகள் நல்ல முறையில் விவசாயம் செய்து இருந்துவருவதால் 1ம் பிரதிவாதி வாதிகள் மீது பொறாமை கொண்டு வழக்கிடை சொத்துக்களை அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் அவ்வப்போது இடையூறுகள் செய்ததை வாதிகள் தடுத்து நிறுத்தியுள்ளனர். கடந்த 25.10.2013ம் தேதியில் வழக்கிடை சொத்துக்களுக்கான வருவாய்த்துறை ஆவணங்களில் 1ம் பிரதிவாதியின் பெயர் வாதிகள் பெயர்களுடன் கூட்டாக மோசடியாக சேர்க்கப்பட்டதை அறிந்து வாதி கடந்த 24.11.2014 ம் தேதியில் கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் உரிய ஆவணங்களுடன் 1ம் பிரதிவாதியின் பெயர் வருவாய்த்துரை ஆவணங்களில் மோசடியாக சேர்க்கப்பட்டுள்ளதை ரத்து செய்யக்கோரி மனுசமர்ப்பித்துள்ளார். அம்மனுவினை விசாரணைக்கு ஏற்றுக்கொண்டு 2.12.2014ம் தேதியில் அளித்த மனு குறித்து விசாரணைகள் செய்ய 20.12.2014ம் தேதிக்கு அழைப்பாணை ஒன்றினை வாதிகளுக்கும் ஜிங்கல்கதிரம்பட்டி -2 கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கும் மண்டல துணை வட்டாட்சியர், போச்சம்பள்ளி அவர்களுக்கும் அனுப்பினார். அதன்படி 20.12.2014ம் தேதி விசாரணைகள் நடைபெற்று உரிய ஆவணங்களை பரிசீலனை செய்து வாதிகளிடமும், வருவாய்துறையினரிடமும் வாக்குமூலங்கள் பெற்றுக்கொண்டு 1ம் பிரதிவாதியின் பெயரை பட்டா எண்.162ல் இருந் நீக்கம் செய்யவும், வருவாய்த்துறை ஆவணங்களில் உரிய மாறுதல் செய்யவும் உத்தரவிட்டுள்ளார். 1ஆம் பிரதிவாதியின் பெயர் வழக்கிடை சொத்துக்களுக்கான வருவாய்த்துறை ஆவணங்களிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது. வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்த நாளான 20.12.2014ம் தேதியில் வழக்கிடை சொத்துக்களான புல எண்கள்.417/4ல் ஏக்கர் 0.26 செண்ட் மற்றும் புல எண் 416/16ல் ஏக்கர் 0.14 செண்ட் சொத்துக்களை 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி பெயருக்கு போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010ன் படி 23.7.2010ஆம் தேதியில், கிரயப்பத்திரம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ள விவரம் வாதிகளுக்கு தெரியவந்து அந்த விவரத்தினை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் முன்னிலையில் சாட்சியம் அளித்துள்ள 2ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட நிலங்களை பத்திர எண்கள். 722, 723, 724/2003 நாள் 7.7.2003-ன்படி மொத்த சொத்தில் அன்பு, தங்கராஜ், வெங்கடேசன் ஆகியோர்களுக்கு தலா 4ல் 1 பங்கு என 1.19.¾ ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டதாகவும், மேற்படி நிலங்களில் புல எண்.417/4ல் விஸ்தீரணம் ஏக்கர் 0.26 மற்றும் புல எண்.416/16ல் விஸ்தீரணம் ஏக்கர் 0.14 ஆக மொத்தம் ஏக்கர் 0.40 செண்ட் நிலத்தினை ரவிச்சந்திரன் என்பவருக்கு கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றும், கைமாறாக பணம் பெற்றதை வைத்து பாண்டு எழுதவேண்டும் என சொல்லி பத்திரத்தில் கையொப்பம் பெற்றுக்கொண்டதாகவும், கிரயம் செய்த விவரம் தெரியாது என்றும், வழக்கிடை சொத்துக்கள் வாதிகள் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் தன் சுவாதீனத்தில் இல்லை என்றும் கூறியுள்ளார். 1ம் பிரதிவாதி மோசடியாக வாதிகள் தகப்பனாரிடம் கைமாறாக பணம் கொடுத்ததை வைத்து கடந்த 23.7.2010ம் தேதியிஜல் ஏற்படுத்தியுள்ள கிரய ஆவணம் மோசடியானது மற்றும் செல்லத்தக்கதல்ல என்றும், 1ம் பிரதிவாதி

WEB COPY

பெயரில் பெயரளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆவணம். வாதிகள் வழக்கு தாக்கல் செய்த பின்னர் 1ம் பிரதிவாதி கடந்த 17.10.2016ம் தேதியில் போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரம் ஒன்றினை வழக்கிடை சொத்து பொறுத்து 4 ஆம் பிரதிவாதியின் பெயரில் மோசடியாக ஏற்படுத்தியுள்ளது செல்லத்தக்கதல்ல. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வழங்கிய உத்தரவுக்கு பின்னர் 1, 2 பிரதிவாதிகளிடம் வழக்கிடை சொத்துக்கள் பொறுத்து மோசடியாக 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தியுள்ள 23.7.2010 தேதியிட்ட கிரய பத்திரத்தை ரத்து செய்யம்படி நேரிலும், ஊர் பொதுவர்கள் முன்னிலையிலும் கேட்டபோது 1, 2 பிரதிவாதிகள் வீண் காலம் கடத்திக்கொண்டு இன்று நாளை என்று சொல்லிவந்தனர். 3ம் பிரதிவாதி வழக்கிடை சொத்துக்களை பொறுத்து வாதிகளின் பெயருக்கு அவருடைய அலுவலகத்தின் மூலம் ஆவணங்களை பதிவு செய்து பின்னர் 1, 2 பிரதிவாதிகள் மோசடியாக ஆவணத்தை பதிவுக்கு தாக்கல் செய்தபோது, உரிய ஆவணங்களை பரிசீலனை செய்யாமல், 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தியுள்ள கிரயப்பத்திரத்தை பதிவு செய்துள்ளதால், 3ம் பிரதிவாதியும் வழக்கிற்கு தரப்பினர். வாதிகளின் சுவாதீன அனுபவத்தில் உள்ள வழக்கிடை சொத்துக்களின் ஒரு பகுதியில் கடந்த 23.9.2016ம் தேதியில் 1ம் பிரதிவாதி அவரின் ஆட்களுடன் வந்து உரிமை கேட்டு அத்துமீறி அக்கிரம பிரவேசம் செய்ய முற்பட்டுள்ளனர். அதனை வாதிகள் மற்றும் அவரின் குடும்பத்தர் மற்றும் ஊர்பொதுவர்கள் உதவியுடன் தடுத்து நிறுத்தியள்ளார்கள். இந்நிலையில் மீண்டும் 1ம் பிரதிவாதி பலமான ஆட்களுடன் கூட்டமாக வந்து வழக்கிடை சொத்தில் அத்துமீறல் செய்யப்போவதாக மிரட்டிச்சென்றுள்ளார். 1ம் பிரதிவாதி பணபலம் படைபலம் மிக்கவர். எப்போதும் எதையும் செய்யத்துணிந்தவர். சட்டத்திற்கு கட்டுப்படாதவர். 1ம் பிரதிவாதியின் சட்ட விரோத செயலை நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே கட்டுப்படுத்த இயலும். 1ம் பிரதிவாதி 17.10.2016ம் தேதியில் ஜம்புகுட்டப்பட்டி கிராமத்தை சேர்ந்த 4ம் பிரதிவாதி ஆர்.சத்தியசீலன் பெயருக்கு வழக்கிடை சொத்து பொறுத்து மோசடியாகவும், பெயரளவிலும் போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016-ன்படி கிரயப்பத்திரம் மோசடியாக ஏற்படுத்தியுள்ள விவரம் வாதிகளுக்கு கடந்த 11.11.2016ம் தேதி போச்சம்பள்ளி சார்பதிவகத்தில் நகல் பெற்ற பார்த்தபோதுதான் தெரியவந்துள்ளது. 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்படுத்தியுள்ள 17.10.2016 தேதியிட்ட கிரயப்பத்திரம் மோசடியானது, செல்லத்தக்கதல்ல. வழக்கிடை சொத்துக்கள் வாதிகளுக்கு மட்டுமே பாத்தியப்பட்ட தனிஉரிமை கொண்ட சொத்துக்கள். வழக்கிடை சொத்துக்களில் வாதிகளை தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை. எனவே வாதிகள் வழக்கிடை சொத்துக்களில் உரிமை விளம்புகை கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் இதர பரிகாரங்களுக்காகவும் வாதிகள் இந்த தாவாவை தாக்கல் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே தாவாப்படி தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட வேண்டும்.

3. பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினர்களாகக் கருதப்பட்டுள்ளது.

WEB COPY

4. வாதி தரப்பில் முதல் வாதி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, 7.7.2003-ல் 1ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் உண்மை நகல் வா.சா.ஆ.1-ஆகவும், 7.7.2003ல் 2ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் உண்மை நகல் வா.சா.ஆ.2-ஆகவும், 7.7.2003ல் 3ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் உண்மை நகல் வா.சா.ஆ.3-ஆகவும், 12.11.2010 தேதியிட்ட கணினி சிட்டா நகல் வா.சா.ஆ.4-ஆகவும், 23.7.2010 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பேரிலான கிரயப்பத்திரம் உண்மை நகல் வா.சா.ஆ.5-ஆகவும், 20.1.2016 தேதியிட்ட நிலவரி ரசீது அசல் வா.சா.ஆ.6-ஆகவும், 15.10.2015 தேதியிட்ட கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகள் அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் உண்மை நகல் வா.சா.ஆ.8-ஆகவும், தாக்கல் செய்து குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :

வாதிகள் கோரியுள்ளபடி, பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

## 6. தீர்வு

வா.சா.1 தனது பிரமாண வாக்குமூலத்தில், வழக்குரையை ஒத்து சாட்சியமளித்துள்ளார். மேலும் அவரது வழக்குரைக்கு வலு சேர்க்கும் வகையில், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் வாதி தரப்பு வழக்கினை மறுதலிக்கும் வகையில் வாய்மொழி சாட்சியமோ அல்லது ஆவண சாட்சியமோ எதுவும் முன்னிடப்படவில்லை. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததாலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் தோன்றாதரப்பினர்களாகியுள்ளனர். எனவே, மேற்குறிப்பிட்ட வா.சா.1ன் பிரமாண வாக்குமூலம் மற்றும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வாதி தரப்பு வழக்கு வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

WEB COPY

7. இறுதியாக அசல் வழக்கு வாதிகள் கோரியபடி வழக்கிடை அ-அட்டவணை சொத்துக்கள் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், வழக்கிடை அ-அட்டவணை சொத்துக்களில் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், வழக்கிடை ஆ-அட்டவணை சொத்துக்கள் 2ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், பி, வழக்கிடை ஆ-அட்டவணை சொத்துக்களில் 2ஆம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு, 1ஆம் பிரதிவாதியும், அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், வழக்கிடை இ-அட்டவணை சொத்துக்கள் 3ஆம் வாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், வழக்கிடை இ-அட்டவணை சொத்துக்களில் 3-ஆம் வாதி நிம்மதியான, அமைதியான அனுபவ சுவாதீனம் இருப்பதற்கு 1ஆம் பிரதிவாதியும் அவரின் ஆட்களும் எவ்வித இடையூறும் செய்யாமலிருக்க

ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2ஆம் பிரதிவாதி 1ஆம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும், வழக்கிடை சொத்து பெயரில் 1ஆம் பிரதிவாதி, 4ஆம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்தும், வழக்கிடை சொத்துக்களின் பெயரில் 2ஆம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி பெயருக்கு 23.7.2010 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2889/2010 கொண்ட கிரயப்பத்திரத்தையும், 4ஆம் பிரதிவாதி பெயருக்கு 17.10.2016 தேதியிட்டு ஏற்படுத்தியுள்ள போச்சம்பள்ளி சார்பதிவக ஆவண எண்.2927/2016 கொண்ட கிரயப்பத்திரத்தையும் ரத்து செய்ய 3ம் பிரதிவாதிக்கு உத்தரவிட்டு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் மற்றும் வழக்கின் செலவுகளை வாதிகளுக்கு 1,2,4 பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிட்டும் தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கி சரிசெய்யப்பட்டு 2018ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19ஆம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

WEB COPY

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்
போச்சம்பள்ளி

இணைப்பு

வாதிகள் தரப்பு சாட்சி:

வா.சா.1 - திரு. அன்பு (1ம் வாதி)

வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:

வா.சா.ஆ.1 ___ 7.7.2003ல் 1ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் (உண்மை நகல்)

வா.சா.ஆ.2 ___ 7.7.2003ல் 2ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் (உண்மை நகல்)

வா.சா.ஆ.3 ___ 7.7.2003ல் 3ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரம் (உண்மை நகல்)

வா.சா.ஆ.4 ___ 12.11.2010 தேதியிட்ட கணினி சிட்டா (நகல்)

வா.சா.ஆ.5 ___ 23.7.2010 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பேரிலான கிரயப்பத்திரம் (உண்மை நகல்)

வா.சா.ஆ.6 ___ 20.1.2016 தேதியிட்ட நிலவரி ரசீது (அசல்)

வா.சா.ஆ.7 ___ 15.10.2015 தேதியிட்ட கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகள் (அசல்)

வா.சா.ஆ.8 ___ 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணம் (உண்மை நகல்)

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை.

மா.உ.ம.கு.நீ.ந.,
போச்சம்பள்ளி